# வருவாய் பகிர்வு முறைமை வாழ்வாதாரத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள் : மகாஊவா தோட்டத்தை சிறப்பாக கொண்ட ஓர் ஆய்வு

**கஜானா, கி., விபுலன், பி.**
புவியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
Soba1619@gmail.com

*இலங்கையின் பொருளாதாரத்தில் ஆடை ஏற்றுமதிக்கு அடுத்தாக இரண்டாவது தொழிற்துறையாக தேயிலை ஏற்றுமதியானது உள்ளது. பொருளாதார வளர்ச்சிக்கு அளப்பரிய பங்களிப்பை வழங்கும் பெருந்தோட்டத்துறையானது, பரந்த அளவிலான தேயிலை மற்றும் அதனுடன் தொடர்புடைய உற்பத்திகளுக்கு சர்வதேச சந்தையில் அங்கீகாரத்தையும், தயாரிப்புகளுக்கு அதிக மதிப்பையும் பெற்றுள்ளது. 1.5 மில்லியன் மக்களுக்கான வேலைவாய்ப்பு, வருடாந்தம் 300மில்லியன் அமெரிக்க டொலர் ஏற்றுமதி வருவாய் என்பவற்றின் மூலமாக இலங்கையின் பொருளாதாரத்திற்கு பயனை வழங்குகின்ற ஒரு துறையாக காணப்படுகின்றது. 2014ஆம் ஆண்டு ஏற்றுமதி வருவாயில் ஏற்பட்ட தொடர்ச்சியான வீழ்ச்சிப் போக்கு, மோசமடைந்து வரும் உலகப் பொருளாதார நெருக்கடி மற்றும் இலங்கை தேயிலையை இறக்குமதி செய்யும் மத்திய கிழக்கு மற்றும் ரஷ்யாவில் நிலவும் பொருளாதார மற்றும் அரசியல் குழப்பநிலை காரணமாக தேயிலை தொழிற்துறையின் எதிர்காலம் ஸ்திரமானதாக இல்லை. இதனைக் கருத்திற் கொண்டு பெருந்தோட்ட கம்பனிகள் தங்களின் இலாபத்தினையும், உற்பத்தித் திறனையும் அதிகரித்து கொள்வதற்கும், உற்பத்தி செலவை குறைக்கவும் "வருவாய் பகிர்வு முறைமை" என்ற புதிய முறைமையை அறிமுகம் செய்தன. இம்முறையினால் பெருந்தோட்ட தொழிலாளர்கள் பல்வேறுப்பட்ட சவால்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதனை கருத்தில் கொண்டு வருவாய் பகிர்வு முறைமைக்கான காரணத்தை கண்டறிதல், வருவாய் பகிர்வுக்கு முன்னர் எவ்வாறான நிலைமை காணப்பட்டது, என்பதை விளங்கிக் கொள்ளுதல் பகிர்ந்தளிக்கப் பட்ட தேயிலைக் காணிகளின் தன்மையை படமாக்கல், இம்முறையினால் தோட்டத் தொழிலாளிகள் எதிர்நோக்கும் சவால்கள் போன்றவற்றை அறிந்து கொள்ளுதல் எனும் நோக்கில் இவ் ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இவ் ஆய்வுக்காக முதலாம் நிலைத்தரவு களான வினாக்கொத்து, நேர்காணல், கள ஆய்வு மூலம் பெறப்பட்ட தரவுகளையும் இரண்டாம் நிலைத்தரவுகளையும் பயன்படுத்தி Arc 10.4 GIS. SPSS, MS Excel போன்றவற்றின் ஊடாக பகுப்பாய்வு செய்யப்பட்டது. இவ் ஆய்வின் ஊடாக தேயிலைக் காணி பகிர்வுக்கான காரணங்களாக கம்பனிக்கு ஏற்பட்ட நஷ்டம், தேயிலைக் காணிகள் காடுகளாக மாற்றப்பட்டமை, தொழிற்சங்கத்தின் பொறுப்பற்ற செயற்பாடுகள், தொழிலாளர் பற்றாக்குறை போன்றனவும், தேயிலை பகிர்வினால் ஏற்பட்ட சவால்களாக குறைந்த வருமானம், அதிகரித்த காணி பராமரிப்பு மற்றும் போக்குவரத்து செலவுகள், தொழிலாளர்களின் இடப்பெயர்வு, வதிவிட வசதி பற்றாக்குறை, பாடசாலை கல்வியில் இருந்தன மாணவர்களின் இடைவிலகல், மின் கட்டணத்தை செலுத்த முடியாமை, வைத்தியசேவைகள் நிறுத்தப்பட்டமை போன்றனவும், தேயிலை காணிப் பகிர்வுக்கு முன்னர் இருந்த சமூகநல உதவித்திட்ட சேவைகள் பகிர்வின் பின்னர் நிறுத்தப்பட்டமை போன்றனவும் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளன.*

**திறவுச்சொற்கள் :** பெருந்தோட்டம், தோட்டத்தொழிலாளி, வருவாய் பகிர்வு முறை, பிராந்திய பெருந்தோட்ட கம்பனி, ஒப்பந்த விவசாயம்